International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 07 Issue: 01 January to March 2025 www.irjtsjournal.org

# பெரும்பாணாற்றுப்படையில் எயினர்களின் வாழ்வியல்

திவ்யதர்ஷினி .தி.ஜெ

*தமிழ்த்துறை*
*பூ.சா.கோ.கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் -14*

***ஆய்வுச்சுருக்கம்***

சங்க இலக்கியங்களில் குறிப்பாக பெரும்பாணாற்றுப்படையில் விரிவாக விவரிக்கப்படும் ஒரு சமூகக் குழுவாக எயினர்கள் திகழ்கின்றனர். வில்லுடன் தொடர்புடையத் தொழிலை மேற்கொண்ட இவர்கள் காடுகளையும், மலைகளையும் தங்கள் வாழ்விடமாகக் கொண்டனர். இளைஞர்கள் பசி மற்றும் பட்டினியைத் தாங்கிக்கொள்ளப் புல்லரிசி சேகரித்து உணவாகக் கொண்டனர். மேலும் மான் தோலைப் போர்வையாக பயன்படுத்தியதன் மூலம் அவர்களின் ஏழ்மை நிலையை வெளிப்படுத்துகின்றது. அவர்கள் வாழ்ந்த குடிசைகள் மிகவும் எளிமையாகவும் சிறியதாகவும் இருக்கும். எயினர்களுக்கு உணவு பற்றாக்குறை ஏற்பட்டாலும் வந்த விருந்தினருக்கு விருந்தோம்பல் அளித்தனர். எயினர்களின் வாழ்க்கை முறையை பற்றிய ஒரு சுருக்கமான விளக்கமாகும். இதனை விரிவாக பின்வரும் கட்டுரையின் வழி அறியலாம்.

**முன்னுரை**

தமிழர்களின் பண்டைய வரலாற்றை ஆராயும்போது, சங்க காலம் ஒரு முக்கியமான காலகட்டமாகும். இக்காலகட்டத்தில் தமிழ் நாட்டில் பல்வேறு சமூகக் குழுக்கள் வாழ்ந்து வந்தன. அவற்றுள் எயினர்கள் என்ற குழுவும் ஒன்று. வில்லுடன் தொடர்புடைய தொழிலை மேற்கொண்ட இவர்கள், சங்க இலக்கியங்களில் பல்வேறு இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளனர். காடுகளையும் மலைகளையும் தங்கள் வாழிடமாகக் கொண்ட இவர்கள், வேட்டையாடுதலில் தேர்ச்சி பெற்றிருந்தனர். இக்கட்டுரை, பெரும்பாணாற்றுப்படையில் எயினர்களின்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2025, IRJTSR 

வாழ்க்கை முறை, சமூக நிலை மற்றும் பண்பாடு ஆகியவற்றை ஆராய்வதாக அமைகிறது.

**பெரும்பாணாற்றுப்படை**

பத்துப்பாட்டில் நான்காவதாக இடம்பெறும் நூல் பெரும்பாணாற்றுப்படை ஆகும். இந்நூல் தொண்டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் புகழ்ந்து பாடியது ஆகும். இசைவாணர்களை அக்காலத்தில் பாணர் என்றழைத்தனர். இவர்களில் பேரியாழ் மீட்டுபவன் பெரும்பாணன் ஆவான். பெரும்பாணன் தொண்டைமானிடம் செல்லும் போது, அவன் தன் யாழை இடப்பக்கத் தோளில் மாட்டிக்கொண்டு செல்கிறான். மேற்கண்ட பயணத்தில் அவன் சென்ற ஊர்களையும் அங்குள்ள மக்களின் வாழ்வியலையும் பெரும்பாணாற்றுப்படை வருணனை செய்கிறது. மேலும், அங்கு வாழ்ந்த எயினர்களின் வாழ்வியலை பற்றி பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது.

**இலக்கியங்களில் எயினர்கள்**

எயினர் என்ற சொல் பாலை நில பொது மக்களின் பொது பெயரை குறிக்கும் . எயினர்கள் வேட்டையாடும் தொழிலை முதன்மையாகச் செய்தவர்கள் ஆவர். வேட்டுவ குடியை சேர்ந்தவர்களைக் குறிப்பதாகவும் சங்க இலக்கியக் குறிப்புகள் உள்ளன. அகநானூற்றுப் பாடல்களில் பல்வேறு சமூகத்தவரின் வாழ்க்கை முறைகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவ்வாறான சமூகத்தவரில் எயினர்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. சான்றாக, கொடு வில் எயினர் குறும்பிற்கு ஊக்கும் என்ற பாடல் வரிகளைக் கூறலாம். (அகம். 319), கடும் பரி குதிரை ஆஅய் எயினன் (அகம். 148), ஆஅய் எயினன் வீழ்ந்து என ஞாயிற்று (அகம். 181), வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்/அளி இயல் வாழ்க்கை பாழி பறந்தலை (அகம். 208), வண் கை எயினன் வாகை அன்ன (புறம். 351), கொடு வில் எயினர் கொள்ளை உண்ட (பட்டினப் பாலை 266), கொடு வில் எயின குறும்பில் சேப்பின் (பெரும். 129) ஆகிய சங்க இலக்கியப் பாடல் வரிகளின் மூலம் எயினர்கள் வாழிடம், தொழில், வாழ்வியல் ஆகியவற்றை அறிந்து கொள்ள முடிகிறது. எயினர்கள் காட்டில் வாழ்ந்து, விலங்குகளை வேட்டையாடி உணவு

தயாரித்தனர். எயினர் தங்களது வேட்டையாடும் திறமையால் பெற்ற விலங்குகளை அரசர்களுக்கும் பிற குடிமக்களுக்கும் பரிசாக வழங்கியுள்ளனர். அன்றைய சமூகத்தில், எயினர்கள் தனித்துவமான இடத்தைப் பிடித்திருந்தனர். இதனை,

**"வெருக்கு விடையன்ன வெருள்நோக்குக் கயந்தலைப்**
**புள்ளூன் தின்ற புலவுநாறு கயவாய்,**
**வெள்வாய் வேட்டுவர் ..........." (புறம். 324)**

என்ற புறநானூற்றுப் பாடல் விவரிக்கிறது. வேடன் பயந்து நிற்கும் நிலையில், காயமுற்ற தலையுடன், பறவைகள் தின்ற சோறு போன்ற துர்நாற்றம் வீசும் வாயுடன் இருக்கிறார். இருந்தாலும், அவருக்கு வெள்ளைப்பல் இருக்கிறது என புறநானூறு வேடனின் புறத்தோற்றத்தை விவரிக்கிறது.

**எயினர்கள்**

பாலை நில மக்கள் என்று மறவர்கள் மற்றும் எயினர்கள் ஆவார்கள். இவர்களை தொல்காப்பியர் அகத்திணையில்,

**"பாலைக்கு மக்கட்பெயர் எயினர் எயிற்றியர்"**

என்று குறிப்பிடுகிறார். எயினர்கள் பாலைத்திணைக்கு உரியவர்கள் என்பதனை மேற்கண்ட நூற்பாவின் வழியே அறிய முடிகின்றது. எயினர்கள் கொற்றவையைத் தெய்வமாக வழிபட்டனர். அவர்களின் நிலத்திற்கு ஏற்ப, தோற்றம் கொண்டவராகவும் கொள்ளையடித்தல் அவர்களின் தொழிலாகவும் இருந்தது என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். இருவகையான எயினர்களைப் பெரும்பாணாற்றுப்படை பேசுகிறது. வேட்டைத் தொழிலையும் கொள்ளை அடிப்பதும் செய்வோர் ஒருவகை. வறுமையினால் வாடும் எயினர்கள் மற்றொருவகை ஆவர்.

**எயினர்களின் குடியிருப்பு**

"ஒவ்வொரு தொழிலுக்குமான தொழிலாளர் எண்ணிக்கையில் அதிகம் என்பதால் அவரவர் தொழில் நிம்மதியாக சேர்ந்து வாழ இருப்பிடங்கள் தனித்தனியே அமைத்தன" (பெரும்பாணாற்றுப்படையில் மக்கள் குடியிருப்பு, ச.

கலைவாணி) என்னும் வரிகளுக்கு ஏற்ப எயினர்கள் சுற்றித் திரியும் வாழ்க்கை வாழ்ந்ததால் அவர்களின் குடிசைகள் தற்காலிகமாக அமைக்கப்பட்டு இருக்கலாம். எயினர்கள் தங்களது குடிசைகளை உருவாக்க இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தினர். அவை, மரக்கிளை, புல், களிமண் மற்றும் இலைகள் ஆகியவை ஆகும். அவர்களின் குடிசைகள் சிறிய அளவிலானவை. எளிமையான அமைப்பைக் கொண்டது. அவர்களின் குடும்பத்திற்கு மட்டுமே இடமளிக்கும் வகையில் அமைந்து இருக்கும். எயினர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இருந்திருக்கலாம். எயினர்கள் எவ்வாறு குடியிருப்பை அமைத்தார்கள் என்பதனை,

**“வரிப்புற அணிலோடு கருப்பை ஆடாது**
**யாற்றுஅறல் புரையும் வெறிநுடைக் கொழுமடல்**
**வேல்தலை அன்ன வைந்நுதி நெடுந்நகர்**
**ஈத்துஇலை வேய்ந்த எய்புறக் குரம்பை”** **(பெரும். 85 - 88)**

எயினர்கள் வாழும் ஊர் குறும்பு எனப்பட்டது. அங்கு ஆற்றுப்பகுதியில் உள்ள மேட்டு நிலத்தில்தான் குடிசையை வேயப்படும். அவ்வாறு வேயப்பட்ட குடிசையானது முள்ளம்பன்றியின் முதுகினைப்போல தோற்றமளிக்கின்றது. அந்த குடிசைக்குள் எலி மற்றும் அணில் போன்ற சிறு பிராணிகள் உள்நுழையாதவாறு குடிசையைக் கட்டி இருந்தார்கள்.

**ஏழ்மை மற்றும் பசி**

பாலை நிலம் மழைக் குறைவாக பெய்யும் பகுதியாக இருந்தது. அதனால் அந்நிலத்தில் வேளாண்மை செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. வறண்ட நிலத்தில் பயிர்கள் உற்பத்தி குறைவாகவே இருந்தது. இயற்கை வளங்களும் பெரிதளவில் விவசாயத்திற்கு ஏற்றதாக இல்லை. இதனால், எயினர்கள் அவர்களது வறுமையின் காரணமாக புல்லரிசி சேகரித்தார்கள். குழந்தையைப் பெற்றெடுத்த பெண்ணைத் தவிர மற்ற எயினப்பெண்கள் புல்லரிசி எடுக்கச் செல்வார்கள். நிலத்தைத் தோண்டி புல்லரிசி எடுப்பார்கள். எறும்பு புற்றுக்குள் இருக்கும்


© 2025, IRJTSR 

புல்லரிசியை எயினமகளிர் தோண்டி எடுப்பார்கள் என்பதனை பின்வரும் பாடல் விளக்குகிறது.

**"உளிவாய்ச் சுரையின் படுநீறு ஆடி,**

**........................................**

**நுண் புல் அடக்கிய வெண்பல் எயிற்றியர்"** (பெரும். 92 - 94)

மேலும், குழந்தை பெற்ற எயினப்பெண் அவள் குழந்தையோடு மான் தோலில் படுத்து இருக்கிறாள். இதிலிருந்து எளிமையான மக்களும் மான் தோலைப் பயன்படுத்தினார். இதனை,

**"மான் தோல் பள்ளி மகவொடு முடங்கி "** (பெரும். 89)

இப்பாடல் அடியின்மூலம் அறியமுடிகிறது.

**எயிற்றியரின் விருந்தோம்பல்**

விருந்தோம்பல் என்பது தமிழர்களின் வாழ்வியலில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ள ஒரு நல்லொழுக்கமாகும். இது வெறும் ஒரு செயல் அல்ல; அது ஒரு வாழ்க்கை முறை. எந்த ஒரு அந்நியனும் நம் வீட்டிற்கு வந்தால், அவரை ஒரு தெய்வமாகவே கருதி, உணவு, உடை, இருப்பிடம் என அனைத்தையும் தாராளமாக வழங்கும் பண்பே விருந்தோம்பல் ஆகும்.

**"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**

**வேளாண்மை செய்தற் பொருட்டு"** (குறள் 81)

என்று விருந்தோம்பலினைத் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பாணாற்றுப்படையில் எயினர்கள் அவர்களது அரண்களில் ஊகம்புல் மிக உயரமாக வேயபட்டு இருக்கும். அவற்றில் அம்புக்கூடுகளும், தேன்கூடுகளும் தொங்கின. வீட்டின் வெளியே அழகான பந்தல் அமைக்கப்பட்டு இருந்தது. நாய்கள் சங்கிலியால் கட்டப்பட்டிருந்தன. எயினர்களின் அரணில் சென்று தங்கும் வழக்கத்தைக் கொண்டு இருந்தனர். சிவந்த நெல்லால் சமைத்த சோறும் நாயால் கவ்வி கொணரப்பட்ட உடும்பின் கறியோடு உணவும் வீடுகள் தோறும் கிடைத்தன.

**"களர்வளர் ஈழத்தின் காழகன் என்ன**



© 2025, IRJTSR 

**சுவல்வினை நெல்லின் செவ் அவிழ்ச் சொன்றி**
**ஞமலி தந்த மனவுச்சூழ் உடுபின்**
**வறைகால் காத்தது ,வயின்தொறும் பெறுகுவிர்" (பெரும்.130-133)**

எயின மகளிர் குடிசையின் முன்பே நிலத்தைத் தோண்டி, உரல் போன்ற அமைப்பைக்கொண்டு வந்து, புல்லரிசியை அந்த உரலில் இட்டு குத்திச் சுத்தம் செய்வார்கள். அதன்பின் அருகில் உள்ள கிணற்றில் இருக்கும் உபரி நீரைப் பயன்படுத்திப் பானையில் புல்லரிசி இட்டுச் சமைப்பர். இதனோடு அவர்கள் உப்பு கண்டமாகிய கருவாட்டையும் வைத்திருப்பார்கள். எயினர்கள் தெய்வத்திற்கு தேக்கு இலையில் உணவு படைப்பது போல வருவோருக்கும் உணவு கொடுப்பார்கள். இதன் மூலம் எயினர்களின் விருந்தோம்பல் பண்பு வெளிப்படுகிறது. இதனை,

**"வல்ஊற்று உவரி தோண்டி தொல்லை**
**முன்வருவார்கள் குழி முரி அடுப்பு ஏற்று**
**பைதீர் கடும்பொடு பதம்மிகப் பெருகுவிர்" (பெரும். 98 -105)**

என்னும் பாடல் அடிகள் மூலம் நன்கு அறியலாம். எயிற்றியர்கள் தங்கள் வீட்டிற்கு வரும் விருந்தினர்களை மரியாதைவுடன் வரவேற்பார்கள். அவர்களின் குறைந்த உணவுப் பொருட்களை விருந்தினருடன் பகிர்ந்து கொள்வார்கள். விருந்தினர்கள் செல்ல வேண்டிய இடத்தை அடைய வழி காட்டுவார்கள்.

## முடிவுரை

வில்லுடன் இணைந்த வாழ்க்கையை மேற்கொண்ட எயினர்கள், சங்க காலத் தமிழ்ச்சமூகத்தில் தனித்துவமான இடத்தைப் பிடித்திருந்தனர். காடுகளையும் மலைகளையும் தங்கள் வாழிடமாகக் கொண்ட இவர்கள், வேட்டையாடுதல் மற்றும் வில் வித்தை ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றிருந்தனர். சங்க இலக்கியங்கள் இவர்களின் வீரம், வாழ்க்கைமுறை, பழக்க வழக்கம், பண்பாடு குறித்த சுவையான தகவல்களைத் தருகின்றன. எயினர்களின் வாழ்க்கை முறை, சங்ககாலத் தமிழர்களின் வாழ்வியல் முறை பற்றிய நமது

புரிதலை விரிவுபடுத்துகிறது. எயினர்கள் பற்றிய ஆய்வுகள், தமிழர்களின் வரலாறு மற்றும் பண்பாடு குறித்த புதிய பரிமாணத்தை நமக்கு வழங்குகின்றன.

## துணை நூற்பட்டியல்


[1] இளம்பூரணர் (2022), தொல்காப்பியம் - பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை

[2] இராகவையங்கார் ரா, பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை

[3] கோவிந்தனார் கா, (1996) பெரும்பாணாற்றுப்படை - விளக்கவுரை, எழிலகம் வெளியீடு, திருவத்திபுரம் (செய்யாறு)

[4] சுப்பிரமணியன் ச வே (பதிப்பாசிரியர்), (2010), சங்க இலக்கியம் (மூலமும் தெளிவுரையும்), மணிவாசகர் வெளியீடு, சென்னை




© 2025, IRJTSR 